ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
| திகதி | 2018.05.31 |

## வெளிநாட்டுத் துறைச் செயலாற்றம் - 2018 மாச்சு

**பொதுநோக்கு**

2018 மாச்சில் வெளிநாட்டுத் துறை கலப்பான செயலாற்றமொன்றினைக் காட்டியது. இறக்குமதி மீதான செலவினம் தொடர்ந்தும் அதிகரித்த போதும் 2018 மாச்சில் ஏற்றுமதிகள் வரலாற்றிலே மிகஉயர்ந்த மட்டத்தினை அடைந்ததன் மூலம் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களையும்விட குறைந்த வர்த்தகப் பற்றாக்குறைக்குப் பங்களித்தது. 2018 மாச்சில் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமையின் மூலம் 2018 சனவரியிலிருந்து அவதானிக்கப்பட்ட சாதகமான போக்கினைத் தொடர்ந்தும் காட்டின. தொழிலாளர் பணவனுப்பல்கள் 2018 பெப்புருவரியில் பதிவுசெய்யப்பட்ட வீழ்ச்சிக்கு மாறாக, இம்மாதகாலப்பகுதியில் உயர்வடைந்தன. அதேவேளை சென்மதி நிலுவையின் நிதியியல் கணக்கு மாச்சில், குறிப்பாக, அரச பிணையங்கள் சந்தை மற்றும் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை என்பனவற்றிலிருந்தான வெளிநாட்டு முதலீடுகள் எடுப்பனவு செய்யப்பட்டமையின் காரணமாக சில வெளிப்பாய்ச்சல்களைக் காட்டின. நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் தொடர்ந்தும் ஆரோக்கியமான மட்டத்தில் காணப்பட்டன.

### அட்டவணை 1: வெளிநாட்டுத்துறைச் செயலாற்றத்தின் தொகுப்பு (அ)

| வகை | மார்ச்சு 2017 ஐ.அ.டொ. மில் | மார்ச்சு 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சனவரி - மார்ச்சு 2017 ஐ.அ.டொ. மில் | சனவரி - மார்ச்சு 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 1,042 | 1,108 | 6.3 | 2,774 | 2,989 | 7.7 |
| இறக்குமதிகள் | 1,869 | 1,979 | 5.8 | 5,279 | 5,971 | 13.1 |
| வர்த்தக மீதி (தேறிய) | -828 | -871 | | -2,505 | -2,982 | |
| சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் | 349 (ஆ) | 433 (இ) | 24.1 | 1,122 (ஆ) | 1,313 (இ) | 17.0 |
| தொழிலாளர் பணவனுப்பல்கள் | 643(ஈ) | 678 | 5.4 | 1,911 (ஈ) | 1,979 | 3.5 |
| கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான உட்பாய்ச்சல் (தேறிய) (உ) | 37 | -36 | | 85 | 19 | |
| அரசாங்கத்திற்கான உட்பாய்ச்சல் | 193 | 195 | | 637 | 773 | |
| தி.உண்டியல்கள் மற்றும் தி.முறிகள் | 69 | 93 | | 282 | 358 | |
| நீண்ட காலக் கடன்கள் | 124 | 103 | | 355 | 415 | |
| திரண்ட நிலுவை | | | | -176 | -311 | |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி, இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை முதலீட்டுச் சபை,

(அ) தற்காலிகமானது.

(ஆ) 2017 இற்கான நாளொன்றிற்கான தங்கியிருக்கும் காலம் மற்றும் சராசரிச் செலவு மதிப்பீடுகள் பற்றி இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அளவீட்டுப் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்டது.

(இ) 2018 இற்கான அதன் அளவீட்டுப் பெறுபேறுகளை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டதுடன் இத்தற்காலிக மதிப்பீடு திருத்தம் செய்யப்படலாம்.

(ஈ) திருத்தப்பட்டது.

(உ) இரண்டாந்தரம் மற்றும் முதனிலைச் சந்தைக் கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### வர்த்தக நிலுவை

முதல் இரண்டு மாதகாலத்திலும் அவதானிக்கப்பட்ட வர்த்தக நிலுவையின் விரிவடைந்த போக்கு 2018 மார்ச்சில் மெதுவடைந்தமைக்கு இறக்குமதி செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்க ஏற்றுமதி வருவாய்கள் உயர்ந்த வீதத்தில் அதிகரித்தமையே காரணமாகும். இது, கடந்த அண்மைக் காலத்தில் அவதானிக்கப்பட்ட ஐ.அ.டொலர் 1 பில்லியனுக்கும் கூடுதலான வர்த்தகப் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2018 மார்ச்சில் குறைந்த வர்த்தகப் பற்றாக்குறையொன்றைத் தோற்றுவித்தது.

**வரைபடம் 1: மாதாந்த வர்த்தக நிலுவை**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

### வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் செயலாற்றம்

**வரைபடம் 2: மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

2018 மாச்சில் வணிகப் பொருள் ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,108 மில்லியனாக விளங்கி வரலாற்றிலே மிகஉயர்ந்த மாதாந்த பெறுமதியினைப் பதிவுசெய்தது. எனினும், 2018 மாச்சில் ஏற்றுமதி வருவாய்களின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி மிதமடைந்தமைக்கு 2017இல் மிகஉயர்ந்த மாதாந்த ஏற்றுமதிப் பெறுமதி மாச்சில் பதிவுசெய்யப்பட்டிருந்தமையே காரணமாகும். கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களே ஏற்றுமதி வருவாய்களின் வளர்ச்சிக்கு முக்கியமாகப் பங்களித்தன. கைத்தொழில் ஏற்றுமதிகளின் கீழ் ஆடை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2013 நவெம்பருக்குப் பின்னர் மிகஉயர்ந்த மாதாந்தப் பெறுமதியினை பதிவுசெய்துகொண்டமைக்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகளில் சிறிதளவு குறைப்பு காணப்பட்டமைக்கிடையிலும், ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். 2018 மாச்சில் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்களிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு இரத்தினக்கல் ஏற்றுமதிகளில் பதிவுசெய்யப்பட்ட உயர்ந்த செயலாற்றமே முக்கிய காரணமாகும். காய்கறிகள், பழவர்க்கங்கள் மற்றும் விதைகளிலிருந்தான தயாரிப்புகள் என்பனவற்றின் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை என்பனவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் அதிகரிப்பொன்றினைத் தோற்றுவித்தன. அதேவேளை, இம்மாத காலப்பகுதியில் பொறிகள் மற்றும் எந்திர சாதனங்கள் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு இலத்திரனியல் சாதனங்கள் வழிவகுத்தன. எனினும், 2018 மாச்சில் போக்குவரத்துச் சாதனங்களிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியடைந்தமை 2017 மாச்மாத காலப்பகுதியில் பல உல்லாசப் படகுகள் ஏற்றுமதி செய்யப்பட்டமையினால் ஏற்பட்ட தளத்தாக்கத்தினை பிரதிபலிப்பதாகக் காணப்படுகின்றது. அதேவேளை, தேயிலை மற்றும் தயாரிக்கப்படாத புகையிலை தவிர்ந்த, வேளாண்மை ஏற்றுமதிகளின் கீழான அனைத்துத் துணை வகைகளும் 2018 மாச்சில் வீழ்ச்சியடைந்தன. உயர்ந்த விலைகள் மற்றும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு என்பனவற்றின் இணைந்த தாக்கம் காரணமாக தேயிலை ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்தன. அதேவேளை, கராம்பு மற்றும் கறுவா என்பனவற்றின் குறைந்த ஏற்றுமதி அளவுகள் வாசனைத்திரவியங்களிலிருந்தான வருவாய்கள் வீழ்ச்சியைத் தோற்றுவித்தன. தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களும் இம்மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தமைக்கு உள்ளீட்டு உற்பத்திகளின் கீழ் வகைப்படுத்தப்பட்ட தேங்காய்த் துருவல் மற்றும் தேங்காய் எண்ணெய் என்பனவற்றின் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவுகள் குறைவடைந்தமையே காரணமாகும். இவ்வீழ்ச்சிக்கு மோசமான வானிலை நிலைமைகளின் காலம் கடந்த தாக்கத்தின் காரணமாக தெங்கு உற்பத்திகள் குறைவடைந்தமையே காரணமாகும். 2018 மாச்சில் இலங்கையின் வணிகப் பொருள் ஏற்றுமதிகளுக்கான முன்னனிச் சந்தைகளாக ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஜேர்மனி மற்றும் இத்தாலி என்பன விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் ஏறத்தாழ 52 சதவீதத்திற்கு வகைகூறின.

## அட்டவணை 2: வணிகப்பொருட்கள் ஏற்றுமதியிலிருந்து வருவாய்கள்(அ)

| வகை | மாச்சு 2017 ஐ.அ.டொ .மில் | மாச்சு 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - மாச்சு 2017 ஐ.அ.டொ. மில் | சன - மாச்சு 2018 ஐ.அ.டொ .மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **779.2** | **861.1** | **10.5** | **2,106.6** | **2,322.0** | **10.2** |
| உணவு, குடிபானம் மற்றும் புகையிலை | 30.8 | 43.7 | 42.0 | 76.5 | 121.5 | 58.8 |
| விலங்குத்தீன் | 9.2 | 11.2 | 21.7 | 22.8 | 26.1 | 14.7 |
| புடவைகள் மற்றும் ஆடைகள் | 453.3 | 486.8 | 7.4 | 1,275.8 | 1,328.7 | 4.1 |
| இதில் ஆடைகள் | 424.8 | 455.8 | 7.3 | 1,201.0 | 1,246.6 | 3.8 |
| புடவைகள் | 21.7 | 21.6 | (0.9) | 55.5 | 58.2 | 4.9 |
| ஏனைய தயாரிக்கப்பட்ட புடவைப் பொருட்கள் | 6.8 | 9.5 | 39.0 | 19.3 | 23.9 | 23.6 |
| இறப்பர் உற்பத்திகள் | 76.7 | 85.8 | 11.8 | 199.5 | 225.2 | 12.9 |
| இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 20.2 | 38.7 | 91.9 | 64.5 | 89.3 | 38.4 |
| பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள் | 38.3 | 47.7 | 24.6 | 101.8 | 108.8 | 6.8 |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 23.8 | 13.4 | (43.8) | 38.9 | 28.6 | (26.4) |
| பெற்றோலிய உற்பத்திகள் | 33.9 | 37.3 | 10.0 | 90.6 | 135.5 | 49.6 |
| இரசாயன உற்பத்திகள் | 14.5 | 15.9 | 9.0 | 35.8 | 41.0 | 14.4 |
| மரம் மற்றும் தாள் உற்பத்திகள் | 13.3 | 13.9 | 3.8 | 35.3 | 37.3 | 5.9 |
| அச்சிடல் பொருட்கள் மற்றும் எழுதுகருவிகள் | 2.7 | 2.2 | (19.5) | 10.0 | 4.9 | (51.4) |
| தோல், பயணப் பொருட்கள் மற்றும் காலணி | 15.2 | 13.9 | (8.8) | 40.9 | 41.7 | 1.9 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் | 7.7 | 7.4 | (3.0) | 17.4 | 20.5 | 17.9 |
| அடிப்படை உலோகங்கள் மற்றும் பொருட்கள் | 11.8 | 13.2 | 11.9 | 27.6 | 36.4 | 32.1 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 3.3 | 3.6 | 10.8 | 8.2 | 7.7 | (5.2) |
| ஏனையவை | 24.4 | 26.5 | 8.2 | 61.1 | 68.7 | 12.5 |
| **2. வேளாண்மை ஏற்றுமதிகள்** | **257.4** | **242.8** | **(5.6)** | **655.9** | **653.1** | **(0.4)** |
| தேயிலை | 133.7 | 138.5 | 3.6 | 349.1 | 368.5 | 5.5 |
| இறப்பர் | 5.8 | 3.7 | (36.9) | 16.4 | 11.8 | (28.1) |
| தேங்காய் | 36.5 | 30.8 | (15.6) | 91.0 | 78.3 | (13.9) |
| வாசனைத்திரவியம் | 30.2 | 23.6 | (22.0) | 86.0 | 78.2 | (9.0) |
| மரக்கறிகள் | 3.3 | 2.9 | (10.7) | 6.9 | 6.4 | (7.3) |
| தயாரிக்கப்படாத புகையிலை | 2.2 | 3.6 | 63.1 | 7.9 | 8.9 | 12.5 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 16.8 | 11.8 | (29.5) | 32.6 | 30.5 | (6.5) |
| கடலுணவு | 29.0 | 28.0 | (3.3) | 66.0 | 70.4 | 6.8 |
| **3. கனிமங்கள் மற்றும் ஏனையவை** | **5.3** | **3.7** | **(29.2)** | **11.9** | **13.6** | **15.1** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **1,041.8** | **1,107.7** | **6.3** | **2,774.3** | **2,988.7** | **7.7** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகாரசபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள், இலங்கை மத்திய வங்கி

(அ) தற்காலிகமானவை

## வணிகப்பொருள் இறக்குமதிகளின் செயலாற்றம்

**வரைபடம் 3: மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்**




மூலம்: இலங்கை சுங்கம், இலங்கை மத்திய வங்கி

2018 மாச்சில் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,979 மில்லியனுக்கு அதிகரித்த வேளையில் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி மிதமடைந்தமைக்கு 2017 மாச்சில் காணப்பட்ட உயர்ந்த இறக்குமதிச் செலவினத்தின் தளத்தாக்கமே பகுதியளவில் காரணமாக அமைந்தது. இடைநிலைப் பொருட்களின் மீதான செலவினத்தினைத் தொடர்ந்து நுகர்வுப் பொருட்கள் இம்மாத காலப்பகுதியில் இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்தன. இடைநிலைப் பொருட்களின் கீழ் எரிபொருள் மீதான இறக்குமதிச் செலவினத்தின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி 2018 மாச்சில் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தமைக்கு 2017 மாச்சில் மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்படாமையினால் ஏற்பட்ட தளத்தாக்கமே முக்கிய காரணமாக அமைந்தது. மேலும், சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் மற்றும் நிலக்கரி என்பன மீது ஏற்பட்ட உயர்ந்த செலவினங்களும் எரிபொருள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பங்களித்தன. அதேவேளை, 2018 மாச்சில் தங்க இறக்குமதிகள் மீதான செலவினம் தொடர்ந்தும் அதிகரித்து மிகஉயர்ந்த மட்டமொன்றினை அடைந்தது. எனினும், அடிப்படை உலோகங்கள் மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு இரும்பு மற்றும் உருக்கு இறக்குமதிகள் குறைந்தளவில் காணப்பட்டமையே முக்கிய காரணமாகும். துணிகளின் குறைந்தளவு இறக்குமதிகளின் விளைவாக இம்மாத காலப்பகுதியில் புடவைகள் மற்றும் ஆடைப்பொருட்களின் மீதான செலவினமும் வீழ்ச்சியடைந்தது. நுகர்வுப் பொருள் வகையில் 2018 மாச்சில் தனிப்பட்ட ஊர்திகளின் இறக்குமதிகள் மீதான செலவினம் 2017இல் தொடர்பான மாதத்துடன் ஒப்பிடுகையில் இருமடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்து பெற்றோலைப் பயன்படுத்தும் சிறிய ஊர்திகள் மற்றும் கலப்பு ஊர்திகளின் இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பினை பிரதிபலிக்கின்றது. சராசரி இறக்குமதி விலைகளில் குறைப்புக்கள் பதிவுசெய்யப்பட்டமைக்கிடையிலும் சீனி மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்தமைக்கு உயர்ந்த அளவு சீனி இறக்குமதி செய்யப்பட்டமையே முக்கிய காரணமாகும். எனினும், பெரும்போக காலத்தில் காணப்பட்ட ஆரோக்கியமான அறுவடையினைத் தொடர்ந்து உள்நாட்டுச் சந்தையில் அரிசி இருப்பு அதிகளவில் கிடைக்கத்தக்கதாகவிருந்தமையின் காரணமாக அரிசி மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது. இதன்படி, 2018 மாச்சில் அரிசியின் இறக்குமதி செய்யப்பட்ட அளவு முன்னைய ஆண்டின் தொடர்பான மாதப்பகுதியின் 140 மில்லியன் கி.கிறாம்களிலிருந்து 71 மில்லியன் கி.கிறாம்களுக்கு குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, இம்மாதகாலப்பகுதியில் முதலீட்டுப் பொருள் வகையிலுள்ள பெரும்பாலும் அனைத்து துணைவகைகளின் இறக்குமதிகள் வீழ்ச்சியடைந்தன. 2018 மாச்சில் இந்தியா, சீனா, யப்பான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் சிங்கப்பூர் என்பன முக்கிய இறக்குமதி நாடுகளாக விளங்கி மொத்த இறக்குமதிகளில் ஏறத்தாழ 53 சதவீதத்திற்கு வகைகூறின.

## அட்டவணை 3: வணிகப்பொருட்கள் இறக்குமதி மீதான செலவினம்(அ)

| வகை | மாச்சு 2017 ஐ.அ.டொ. மில் | மாச்சு 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) | சன - மாச்சு 2017 ஐ.அ.டொ. மில் | சன - மாச்சு 2018 ஐ.அ.டொ. மில் | மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்** | **468.5** | **477.1** | **1.8** | **1,170.5** | **1,360.4** | **16.2** |
| உணவு மற்றும் குடிவகைகள் | 213.5 | 177.3 | (17.0) | 505.2 | 526.3 | 4.2 |
| தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் | 53.6 | 31.2 | (41.7) | 103.4 | 89.6 | (13.4) |
| இதில் அரிசி | 52.6 | 29.7 | (43.5) | 100.2 | 84.5 | (15.6) |
| பால் உற்பத்திகள் | 37.2 | 34.4 | (7.6) | 84.8 | 93.2 | 9.9 |
| சீனி மற்றும் இனிப்பு வகைகள் | 24.4 | 29.4 | 20.6 | 63.8 | 88.1 | 38.2 |
| மரக்கறிகள் | 34.8 | 28.0 | (19.4) | 101.5 | 98.5 | (3.0) |
| கடலுணவு | 22.2 | 17.4 | (22.0) | 54.6 | 58.6 | 7.4 |
| குடிபானங்கள் | 8.4 | 6.0 | (28.3) | 19.6 | 16.3 | (16.9) |
| வாசனைத் திரவியங்கள் | 11.5 | 10.8 | (5.9) | 27.4 | 25.4 | (7.5) |
| ஏனைய உணவு மற்றும் குடிபானங்கள் | 21.3 | 20.0 | (6.3) | 50.1 | 56.6 | 13.1 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 255.0 | 299.9 | 17.6 | 665.3 | 834.2 | 25.4 |
| ஊர்திகள் | 74.5 | 150.0 | 101.3 | 191.9 | 358.8 | 87.0 |
| மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 44.5 | 47.4 | 6.5 | 125.2 | 130.0 | 3.8 |
| ஆடை மற்றும் துணைப் பொருட்கள் | 30.6 | 27.0 | (11.7) | 86.7 | 96.8 | 11.6 |
| தொலைத்தொடர்பூட்டல் கருவிகள் | 37.1 | 24.4 | (34.1) | 79.8 | 73.0 | (8.5) |
| வீட்டுச்சாதனப் பொருட்கள் | 30.2 | 21.0 | (30.6) | 71.3 | 68.3 | (4.3) |
| அழகுசாதனங்கள் மற்றும் மலசலகூடப் பொருட்கள் | 8.1 | 5.6 | (31.4) | 22.4 | 18.7 | (16.4) |
| அச்சிடல் கைத்தொழில் உற்பத்திகள் | 4.6 | 2.0 | (56.4) | 9.6 | 7.3 | (24.3) |
| ஏனைய உணவல்லா பயன்பாட்டுப் பொருட்கள் | 25.4 | 22.5 | (11.6) | 78.3 | 81.3 | 3.7 |
| **2. இடைநிலைப் பொருட்கள்** | **948.5** | **1,121.7** | **18.3** | **2,806.5** | **3,351.4** | **19.4** |
| எரிபொருள் | 245.3 | 398.0 | 62.3 | 882.6 | 1,075.2 | 21.8 |
| இதில் மசகெண்ணெய் | - | 49.9 | - | 126.1 | 153.4 | 21.6 |
| சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியம் | 206.8 | 304.2 | 47.1 | 625.3 | 797.0 | 27.5 |
| நிலக்கரி | 38.5 | 43.8 | 13.7 | 131.2 | 124.8 | (4.9) |
| வைரங்கள் மற்றும் அருங்கற்கள், உலோகங்கள் | 51.6 | 150.3 | 191.1 | 175.1 | 375.1 | 114.3 |
| இதில் தங்கம் | 40.7 | 139.7 | 243.1 | 151.5 | 345.3 | 128.0 |
| புடவைகள் மற்றும் ஆடைப் பொருட்கள் | 227.0 | 198.6 | (12.5) | 666.7 | 691.1 | 3.7 |
| பிளாத்திக்கு மற்றும் அதன் பகுதிகள் | 57.4 | 66.1 | 15.2 | 153.9 | 177.8 | 15.5 |
| உணவுத் தயாரிப்புக்கள் | 33.8 | 34.7 | 2.6 | 76.9 | 85.4 | 11.0 |
| அடிப்படை உலோகங்கள் | 61.9 | 27.9 | (54.8) | 152.7 | 135.4 | (11.3) |
| ஊர்திகள் மற்றும் எந்திரங்களின் உதிரிப்பாகங்கள் | 25.7 | 26.2 | 2.2 | 77.8 | 81.2 | 4.4 |
| இறப்பர் மற்றும் அதன் பகுதிகள் | 28.2 | 17.2 | (38.9) | 72.2 | 63.0 | (12.7) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வளமாக்கி | 6.7 | 11.9 | 77.6 | 19.8 | 74.7 | 276.1 |
| தயாரிக்கப்படாத புகையிலை | 5.2 | 7.2 | 38.5 | 12.6 | 16.2 | 28.9 |
| ஏனையவை | 205.6 | 183.5 | (10.8) | 516.2 | 576.3 | 11.7 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** | **449.6** | **378.6** | **(15.8)** | **1,242.1** | **1,196.0** | **(3.7)** |
| பொறி மற்றும் கருவிகள் | 237.8 | 210.6 | (11.5) | 686.2 | 651.3 | (5.1) |
| கட்டடப் பொருட்கள் | 142.0 | 112.3 | (20.9) | 389.8 | 378.4 | (2.9) |
| போக்குவரத்துச் சாதனங்கள் | 69.0 | 54.9 | (20.4) | 163.5 | 163.9 | 0.2 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 0.7 | 0.8 | 8.1 | 2.5 | 2.4 | (5.2) |
| **4. வகைப்படுத்தப்படாத இறக்குமதிகள்** | **2.8** | **1.1** | **(62.2)** | **60.3** | **63.2** | **4.8** |
| **மொத்த இறக்குமதி** | **1,869.3** | **1,978.5** | **5.8** | **5,279.4** | **5,971.0** | **13.1** |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா ஐஓசி பிஎல்சி, இலங்கை மத்திய வங்கி
(அ) தற்காலிகமானவை

**நடைமுறைக் கணக்கிற்கான ஏனைய முக்கிய உட்பாய்ச்சல்கள்**

2018 மாச்சில் சுற்றுலாப் பயணிகள் வருகைகள் 2017 மாச்சுடன் ஒப்பிடுகையில் 24.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு இந்தியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜேர்மனி என்பனவற்றிலிருந்தான சுற்றுலாப் பயணிகளின் உயர்ந்த எண்ணிக்கையினான வருவாய்களே காரணமாக அமைந்தது, 2018இன் முதல் காலாண்டுப் பகுதியில் மொத்த சுற்றுலாப் பயணிகளின் வருகைகள் 707,924ஆக அமைந்து 2017 முதற்காலாண்டுப் பகுதியினை விட 17.0 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. 2018 மாச்சில் சுற்றுலாவிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 433 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளதுடன் 2018 முதல் காலாண்டுப்பகுதியில் ஒன்று சேர்ந்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 1,313 மில்லியன்களாகக் காணப்பட்டது. 2018 பெப்புருவரி காலப்பகுதியில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சிக்கு மாறாக, 2018 மாச்சில் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 678 மில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. இதன்படி, 2018இன் முதல் காலாண்டின் தொழிலாளர் பணவனுப்பல்கள் 2017இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 1,979 மில்லியனுக்கு 3.5 சதவீதத்தினால் அதிகரித்தன.

**வரைபடம் 4: சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் முதல் ஐந்து மூலங்கள்**




மூலம்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

**வரைபடம் 5: சுற்றுலாவிலிருந்தான வருகைகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்**




மூலங்கள்: இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள், இலங்கை மத்திய வங்கி

**நிதியியல் பாய்ச்சல்கள்**

2018 மாச்சில் இரண்டாந்தர மற்றும் முதலாந்தரச் சந்தையில் வெளிநாட்டுச் செலவாணிப் பாய்ச்சல்கள் உள்ளிட்ட கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் ஐ.அ.டொலர் 35.7 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்தான தேறிய வெளிப்பாய்ச்சலுக்கு இலங்கையின் பல்கூட்டு குழுமக் கம்பனியொன்றின் பங்குடமையிலிருந்து வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவர் வெளியேறியமையினால் ஏற்பட்ட ஒரே தடவையிலான கொடுக்கல்வாங்கலே முக்கிய காரணமாக அமைந்தது. 2018இன் முதல் காலாண்டுப் பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான ஒன்றுசேர்ந்த தேறிய உட்பாய்சல்கள் ஐ.அ.டொலர் 18.8 மில்லியனாக விளங்கின. அதேவேளை, 2018 மாச்சில் அரச பிணையங்கள் சந்தை (திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகள்) ஐ.அ.டொலர் 18.1 மில்லியன் கொண்ட தேறிய வெளிநாட்டு முதலீட்டு வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தமையின் மூலம் 2018 மாச்சு இறுதியில் தேறிய ஒன்றுசேர்ந்த வெளிப்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 26.3 மில்லியன்களுக்கு உயர்வடைந்தது. மேலும், 2018 மாச்சுமாத காலப்பகுதியில் அரசாங்கத்திற்கான நீண்டகாலக் கடன்கள் ஐ.அ.டொலர் 58.6 மில்லியன் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்றினைப் பதிவுசெய்தமைக்கு இம்மாதகாலப்பகுதியில் கடன்களின் மீள்கொடுப்பனவுகள் கடன்களின் உட்பாய்ச்சல்களை விஞ்சியமையே காரணமாகும்.

**பன்னாட்டு ஒதுக்குகள்**

2018 மாச்சின் இறுதியில் நாட்டின் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் மட்டம் ஐ.அ.டொலர் 7.3 பில்லியன்களில் மதிப்பிடப்பட்டு 4.1 மாத இறக்குமதிகளுக்கு சமமானதாகக் காணப்பட்டது. 2018 மாச்சு இறுதியில் உள்ளவாறு வங்கித்தொழில் துறையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் உள்ளிட்ட மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் ஐ.அ.டொலர் 9.6 பில்லியன் என மதிப்பிடப்பட்டதுடன் 5.3 மாத இறக்குமதிகளை நிதியிடப் போதுமானதாகக் காணப்பட்டது.

**வரைபடம் 6: மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மற்றும் திரண்ட நிலுவை**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**செலாவணி வீத அசைவுகள்**

இவ்வாண்டில் 2018 மே 30 வரையான காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 3.3 சதவீதத்தினால் தேய்வடைந்தது. மேலும், குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கை ரூபா இக்காலப்பகுதியில் இந்திய ரூபா தவிர்ந்த ஏனைய முக்கிய நாணயங்களுக்கெதிராக தேய்வடைந்தது. இலங்கை ரூபா பலவீனமடைந்தமையானது ஐ.அ.டொலர் உலகளாவிய ரீதியில் பரந்த அடிப்படையொன்றில் பலமடைந்து வருவதனை பகுதியளவில் பிரதிபலிப்பதாகவிருக்கின்றது.

**வரைபடம் 7: ஐ.அ.டொலரொன்றிற்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 4: தெரிவுசெய்யப்பட்ட நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் அசைவு**

| நாணயம் | 2017 | 2018 மே 30 வரை உயர்வு (+) / தேய்வு (-) |
|---|---|---|
| ஐ.அ.டொலர் | -2.0% | -3.3% |
| யூரோ | -13.5% | -1.0% |
| பவுண் ஸ்ரேலிங் | -10.5% | -2.2% |
| யப்பானி யென் | -5.1% | -6.8% |
| கனேடியன் டொலர் | -8.6% | -1.0% |
| அவுஸ்திரேலிய டொலர் | -9.0% | -0.3% |
| இந்தியன் ரூபா | -7.5% | +1.8% |

மூலம்: இலங்கை மத்திய வங்கி